**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திரு. P.சிவஞானம், எம்,ஏ., எம்.எல்,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் நாள் வியாழக்கிழமை

**<u>கோரிக்கை மனு எண். (C.P.) 79/2019</u>**

**CNR No.TNKP 18-000429-2019**

S.ஜெகதீசன்,
த/பெ.சுந்தரராஜன்
எண்.4, வனியர் தெரு,
மங்களம்,
திருக்கழுகுன்றம்,
காஞ்சிபுரம் மாவட்டம். . . . மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

1. நிர்வாகம்,
   யூகால் ஆட்டோ பிரைவேட் லிமிடெட்,
   எண்.11 & A12, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
   மறைமலை நகர்,
   காஞ்சிபுரம் மாவட்டம் - 603 209.
2. சுஜா ஷீய் இண்டஸ்டிரியல் பிரைவேட் லிமிடெட்,
   R.s.No.136/4,5,6,13,14 & 15A, N.H.45,
   பாதிரி, திண்டிவனம்,
   தமிழ்நாடு - 604 307. . . . எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த கோரிக்கை மனு 12.10.2021 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.H.பாலாஜி அவர்கள் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் P.அசோக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத

காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் தரவேண்டிய சம்பளம் மற்றும் இதர பண பயன்களின் நிலுவைத்தொகையான ரூ.16,73,700/- வழங்கிட உத்திரவிடவேண்டுமென்று கோரி இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

முதல் எதிர்மனுதாரர் நிர்வனத்தில் மனுதாரர் Grade-1 Technical Operatorஆக பணிபுரிந்து வந்துள்ளார். 01.01.2004 தேதியில் நிரந்தர தொழிலாளியாக்கப்பட்டார். மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டததால் 2005ம் ஆண்டில் வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டு பணிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. சிகிச்சைக்கு பிறகு பணிக்கு சென்ற போது நிர்வாகத்தால் மனுதாரரை கம்பெனிக்குள் பணி செய்ய அனுமதிக்கவில்லை. உடன் பணிபுரிந்த தொழிலாளர்களின் உதவியுடன் பெரும் போராட்டத்திறகு பிறகு அனுமதிக்கப்பட்டார். அவ்வாறு பணி செய்ய அனுமதிக்கப்பட்ட நிலையில் நிர்வாகம் மனுதாரரை பழி வாங்கும் எண்ணத்துடன் புதிய பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி கண் துடைப்பிறக்காக உள்விசாரணை நடத்தி 2007ஜூலை மாதத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டார். பணி நீக்க உத்தரவு இயற்கை நியத்திக்கு எதிரானது என்பதால் சென்னை 2வது கூடுதல் தொழிலாளர் நீதிமன்றத்தில் I.D.No.122/2014 என்ற தொழிற்தகராறு வழக்கு தாக்கல் செய்தார். அதில் 18.03.2015 தேதியில் மனுதாரரை மீண்டும் பணியில் சேர்த்து கொள்ள வேண்டுமென்றும், பின் சம்பளம் மற்ற அனைத்து பண பயன்களையும் அளிக்க வேண்டுமென்றும் தொழிலாளர் நீதிமன்றத்தில் உத்தரவு செய்யப்பட்டது. ஆனால், தொழிலாளர் நீதிமன்றத்தில் அளித்த உத்தரவினை இதுவரை பலமுறை மனுதாரர் வேண்டுகோள் விடுத்தும் நிர்வாகம்

செயல்படுத்தவில்லை. அதனால் மனுதாரருக்கு வழங்க வேண்டிய பின்சம்பளம், இதர பணபயன்களை கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இதன்படி 2007 ஜுலை மாதத்திலிருந்து 2019 மார்ச் மாதம் வரையிலான 141 மாதங்களுக்கான மாத சம்பளம் ரூ.10,57,500/-, விடுப்பு சம்பளம் ஆண்டொன்றிற்கு ரூ.4,250/- வீதம் 12 ஆண்டுகளுக்கு் ரூ.1,02,000/-, ஒரு ஆண்டுக்கு போனஸ் ரூ.17,000/- வீதம் 12 ஆண்டுகளுக்கு ரூ2,04,000/- incentive ஒரு மாதத்திற்கு ரூ.2,200/-ஆக 141 மாதத்திற்கு ரூ.3,10,200/- ஆக மொத்தம் ரூ.16,73,700/- தொகையை எதிர்மனுதாரர்கள் வழங்க உத்தரவு செய்யப்பட வேண்டும்.

எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாததாலும் ஆஜரின்மையாலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். முதல் எதிர்மனுதாரர்/ நிர்வாகத்திடமிருந்து 2வது எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்சாலையை வாங்கி நடத்தி வருவதால் 2வது எதிர்மனுதாரரும் இந்த தொகையை அளிக்க உத்தரவு செய்யவேண்டுமென்று மனுதாரர் தன்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார். மனுதாரர் முதல் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தொழிலாளியாக வேலை செய்து வந்தபோது மனுதாரரை பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தரவை எதிர்த்து சென்னை 2வது தொழிலாளர் நீதிமன்றத்தில் I.D.No.122/2014 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் 18.03.2015 தேதியில் அளித்த தீர்வம் நகல் ம.த.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. மீண்டும் பணி அமர்த்தி பணி தொடர்ச்சியுடன், பின் சம்பளம் மற்றும் இதர பண பயன்களை வழங்க உத்தரவு செய்யப்பட்டுள்ளது. அந்த உத்தரவிற்கு பிறகும் மனுதாரருக்கு மீண்டும் பணி வழங்கவில்லை என்றும், பின் சம்பளம் மற்றும் இதர பண பயன்களை வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்வுக்கு பிறகு முதல் எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்சாலையை 2வது எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் வாங்கப்பட்டு விட்டதாகவும் தற்பொழுது 2வது எதிர்மனுதாரர் நிர்வாகம் தான் தொழிற்சாலையை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கில் ஆஜராகி ஆட்சேபனை ஏதும் செய்யவில்லை. அந்த வகையில் மனுவில் குறிப்பிட்டுள்ள தொகையை எதிர்மனுதாரர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளதாக அனுமானிக்கப்படுகிறது.

மனுவில் குறிபிட்டுள்ளவாறு 2007 ஜூலை மாதத்திலிருந்து 2019 மார்ச் மாதம் வரையிலான 141 மாதங்களுக்கான சம்பளம் பாக்கி தொகையாக ரூ.10,57,500/- ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தொகையை எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்த்தும் அல்லது தனிதனியாகவோ அளிக்க கடமைபட்டவர்கள். விடுப்பு சம்பளம் ஆண்டிற்கு ரூ.4,250/- ஆக உள்ள நிலையில் 12 ஆண்டுகளுக்கான விடுப்பு சம்பளம் ஆக சரியாக வழங்கவேண்டிய தொகை ரூ.51,000/- ஆகும். ஆனால் மனுவில் ரூ.1,02,000/- என்று குறிப்பிடபட்டுள்ளது சரியல்ல. அந்த வகையில் விடுப்பு சம்பளமாக ரூ.51,000/- மனுதாரருக்கு கிடைக்க வேண்டியதாகும். போனஸ் தொகையாக 12 ஆண்டுகளுக்கு ஆண்டிற்கு ரூ.17,000/- வீதம் 2,04,000/- கொடுக்க வேண்டுமென்று மனுதாரர் கோரியுள்ளார். மனுதாரர் பணியில் இல்லாத நிலையில் சட்டப்படி ஆண்டுக்கு ஒரு மாத சம்பளம் மட்டுமே 1 மாத போனஸாக கோரமுடியும். அந்த வகையில் 12 ஆண்டுகளுக்கு ஒரு மாத சம்பளம் ரூ.7,500/- வீதம் கணக்கிட்டு போனஸ் ரூ.90,000/- கிடைக்கக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு மாதமும் incentive ரூ.2,200/- வழங்க வேண்டுமென்று கோரும் வகையில் 141 மாதங்களுக்கான incentive தொகை ரூ.3,10,200/- ஆகும் அந்த வகையில் மனுதாரர் சரியாக வழங்க வேண்டிய சம்பள பாக்கி, போனஸ் இதர பண பயன்களுக்காக கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது.

| | |
|---|---|
| சம்பள பாக்கி | ரூ.10,57,500/- |
| விடுப்பு சம்பளம் | ரூ. 51,000/- |
| போனஸ் பாக்கி தொகை | ரூ 90,000/- |
| incentive பாக்கி தொகை | ரூ. 3,10,200/- |
| | ------------------- |
| ஆக மொத்த தொகை | ரூ.15,08,700 |
| | ------------------- |

இந்த தொகையை எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்தோ அல்லது தனிதனியாகவோ மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்று இந்த கோரிக்கை மனுவில் உத்தரவிடப்படுகிறது.

முடிவில் இந்த கோரிக்கை மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு சம்பள பாக்கி தொகை மற்றும் இதர பண பயன்களாக ரூ. 15,08,700/- யை எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்தும் அல்லது தனிதனியாகவோ செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு இந்த கோரிக்கை மனுவை பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து/ தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணிணி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2021ம் ஆண்டு அக்டோபர் 28ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.த.சா.1 S.ஜெகதீசன்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.த.சா.ஆ.1 | 18.03.2015 | சென்னை 2வது தொழிலாளர் நீதிமன்றத்தில் அளித்த தீர்வம் நகல். |
| ம.த.சா.ஆ.2 | 05.10.2015 | தொழிலாளர் உதவி ஆணையரால் மனுதாரருக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் அனுப்பிய அறிவிப்பு. |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி/சான்றாவணம் இல்லை.</u>**

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.